# 5 முதல் 11 வயது வரையிலான குழந்தைகளுக்கு தடுப்பூசி



## தடுப்பு மருந்து தகவல்கள்



கனடா சுகாதார நிறுவனம் நவம்பர் 19, 2021இல் சிறார்களுக்கான Pfizer-BioNTech நோய்த் தடுப்பு மருந்து பாவிப்பதை அங்கீகரித்துள்ளது. நோய்த் தடுப்புக்கான தேசிய ஆலோசனைக் குழு (NACI) முழுமையான நோய்த் தடுப்புக்கு Pfizer-BioNTech Covid-19 தடுப்பூசி இரண்டு தடவைகள் ஏற்றிக் கொள்ள வேண்டுமெனப் பரிந்துரைக்கிறது. சிறார்களுக்கான கோவிட் - 19 நோய்த் தடுப்பு மருந்து 5 இலிருந்து 11 வயது வரையுள்ள சிறார்களுக்குப் பாதுகாப்பானதும் அதிக பயன் தரக் கூடியதாகவும் இருக்கிறது.

சிறார்களுக்கான புதிய Pfizer-BioNTech கோவிட் - 19 தடுப்பு மருந்து 10 மைக்கிரோகிராம் (mcg) அளவு கொண்டது. ஒப்பீடாகப் பதின்ம வயதினருக்கும் 12 வயதுக்கு மேற்பட்ட இளையோருக்கும் அங்கீகரிக்கப்பட்ட மருந்தின் அளவு 30 மைக்கிரோகிராம் ஆகும்.



NACI பரிந்துரைகளைச் செய்யும்போது அது மருத்துவ ஆய்வுத் தரவுகளையும் உலகின் உண்மையான பாவனைத் தரவுகளையும் மீளாய்வு செய்கிறது. முதலாவது தடுப்பூசிக்கும் இரண்டாவது தடுப்பூசிக்கும் இடையிலான கால அளவு குறைந்தது 8 வாரங்களாவது இருக்க வேண்டும் என NACI பரிந்துரை செய்கிறது. குறுகிய கால இடைவெளி இருப்பதை விடக் கூடிய கால இடைவெளி இருக்கும்போது வலுவான நோய் எதிர்ப்புச் சக்தியும், தடுப்பூசி பெறுவதனால் எதிர்பார்க்கப்படும் நீடித்த பலாபலனும் ஏற்படுவதைத் தடுப்பூசி ஏற்றிக்கொண்ட வயது வந்தவர்களிடமிருந்து வெளிவந்து கொண்டிருக்கின்ற சான்றுகள் அறியத் தருகின்றன. அத்துடன் இது பதின்ம வயதினரிலும், இளம் ஆட்களிலும் இதயத் தசை அழற்சி, இதய வெளியுறை அழற்சி போன்ற சிக்கல்கள் ஏற்படும் ஆபத்தைக் குறைக்கலாம் எனவும் அறியப்படுகிறது.



**ஆதாரம்:** Toronto Public Health

CASSA COUNCIL OF AGENCIES SERVING SOUTH ASIANS

SOUTH ASIAN VACCINE ENGAGEMENT COLLABORATIVE